16th March 1966]

விட்டார்களா என்று கேட்க விரும்புகிறேன். ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு டி.எம். அன்ட் எஸ்., ஜி.ஸி.ஐ.எம். படித்துவிட்டு இருக்கக்கூடிய டாக்டர்களைப் போட்டு விட்டு, அனுபவம் உள்ளவர்களை டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டர்ஸில் போட்டால் அங்கு ஆப்பரேஷன் முதலியன செய்ய வேண்டியிருப்பதால் வசதியாக இருக்கும்; ஆகவே, இதைச் சிந்திப்பார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் என்னுடைய பதிலைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். எக்ஸ்பீரியன்ஸ்ட் டாக்டர்ஸ் என்று கூறும்போது, இரண்டு ஆண்டுகள் டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டஸில் பணிபுரிந்தவர்களை மாற்றியிருப்பதைத் தான் சொன்னேன். ஜில்லா மருத்துவமனையில் போஸ்ட் கிராஜுவேட் படித்துள்ள சர்ஜன்கள், ஃபிஸிஷன்கள் எல்லாம் இருக்கிறார்கள். டிஸ்ட்ரிக் ஹெட்க்வார்ட்டர்ஸ் மருத்துவ மனையில் வருகிறவர்களுக்கு எந்த விதத்திலும் மருத்துவ வசதி குறைந்து விடாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்க மருத்துவ மனைகள்

* 307. கேள்வி.—திரு. எல். ஆனந்தன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தாலுகா தலைமை ஆஸ்பத்திரியில் (X-ray) வசதி ஏற்படுத்தும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எக்ஸ்ரே கச்சா பிலிம்களைப் பெறுவதில் உள்ள இடர்ப்பாட்டினால் கள்ளக் குறிச்சியில் உள்ள அரசாங்க மருத்துவமனைக்கு எக்ஸ்ரே இயந்திரங்கள் வாங்கும் திட்டம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. 1967-68-ம் ஆண்டில் இது ஆலோசிக்கப்படும்.

* 308. கேள்வி—திரு. ஆ. தங்கவேலு: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்ட பழைய தலைமை மருத்துவ மனைக்கு 1965 ஜனவரி முதல் டிசம்பர் முடிய பிரசவத்திற்கு வந்த பெண்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுள் உயிர் இழந்தவர்கள் எத்தனை பேர்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று ஐந்து.

(இ) ஏழு.

திரு. ஆ. தங்கவேலு: தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையில் பிரசவத்திற்கு வருகிற பெண்கள் சரியான முறையில் கவனிக்கப்படாததால் உயிர்ச் சேதம் ஏற்படுகிறது என்பதைக் குறித்து ராமநாதபுரத்திலிருந்து புகார் வந்திருக்கிறதா? இங்கே

அமைச்சர் அவர்கள்கூட, ஏழு பேர்கள் இறந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த இழப்புக்குக் காரணமாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த ஏழு கேஸ்களையும் ரொம்ப ஸீரியஸ் கண்டிஷனில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்திருக்கிறார்கள் அதற்குப் பிறகு டாக்டர்கள் செய்ய வேண்டிய சிகிச்சைகள் எல்லாம் அளித்தும்கூட, அவர்கள் உயிரைக் காப்பதற்கு இயலாமல் போய்விட்டதேயொழிய, நெக்ளிஜென்ஸால் இறந்தவர்கள் எண்ணிக்கை ஏழு-ஆக இருக்கிறது என்று கூறுவது சரியல்ல. 1295 பேஷன்ட்டுகளில் 7 பேர்கள், அதுவும் அவர்கள் வீட்டிலேயே பார்த்து, அதன் பிறகு மெட்டர்னிட்டி அஸிஸ்டென்ட்டை அழைத்துப் பார்த்து, ப்ளீடிங் rupture uterus போன்ற கண்டிஷனில் கேஸ்கள் கொண்டுவரப்பட்டன. ஆகவே, டாக்டர்கள் அவர்கள் இறந்ததிற்கு காரணம் என்று கூறுவதற்கில்லை.

9-00 a.m. **திரு. எம். எஸ். மணி :** இறந்துபோன பெண்களுடைய எண்ணிக்கை 7 என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பிரசவத்திலே பிறந்த குழந்தைகளில் எத்தனை இறந்தன என்று குறிப்பிட முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : வயிற்றிலே இறந்து போன குழந்தை (ஸ்டில் பார்ன்) ஒன்று.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—CALLING ATTENTION TO THE PROMULGATION OF ORDERS UNDER SECTION 144, Cr.P.C. IN NEYVELI.

SRI T. KARCHA GOWDER : Sir, I call the attention of Hon. Chief Minister to a matter of urgent public importance, viz., the explosive situation caused by the police in Neyveli in promulgating orders under section 144, Cr.P.C., prohibiting meetings and processions of workers of the I.N.T.U.C. Union in the Neyveli Lignite Corporation for ten days and thereby curbing the rights of the workers under the Trade Union Acts and **Laws.**

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would like to make this statement about this matter.

The Neyveli Lignite Corporation in South Arcot District has proposed to retrench the surplus staff of about 208 Section Officers and Junior Engineers of the Corporation in stages. In the first phase of the retrenchment, about 85 of the officers are facing the prospect of losing their jobs from 31st March 1966. The Administration is however doing its best to absorb the retrenched staff in other Government of India undertakings.

The Staff Union of the Corporation under the fold of the I.N.T.U.C. wanted to take out a procession, consisting of Junior Engineers and Section Officers on 28th February 1966 to meet